<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்</u>

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, **B.A, L.L.B.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு மார்ச் 23–ம் நாள் திங்கள்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09–ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 574/2025</u>

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
அச்சிறுப்பாக்கம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.2/2023 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1–விமல், த/பெ.சுந்தரம்,
எண்.75, முதல் தெரு, சாந்தமை கிராமம்,
மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

A2–சக்திமுத்து, த/பெ.முனுசாமி,
எண்.23 மாரியம்மன் கோயில் தெரு, உத்தமநல்லூர் காலனி,
சீதாபுரம், மதுராந்தகம் தாலுக்கா,
செங்கல்பட்டு மாவட்டம்.

........ எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 23.03.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 574/2025<br>TNCG15-002940-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Acharapakkam PS.<br>**Complainant** |
| | | A1–விமல், த/பெ.சுந்தரம்,<br>A2–சக்திமுத்து, த/பெ.முனுசாமி,<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 31.12.2022 |
| 7. | Date of Complaint | 01.01.2023 |
| 8. | Date of Arrest if any and remand | A1 – Anticipatory Bail, A2 remanded on |

<table>
<tr><td></td><td></td><td>06.01.2023</td></tr>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td>-----</td></tr>
<tr><td>10.</td><td>Date of release on bail</td><td>A2 released on 10.01.2023</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td>26.11.2025</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>-------</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita</td><td>04.02.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td><table>
<tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>05.03.2026</td><td>05.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>05.03.2026</td><td>05.03.2026</td></tr>
<tr><td>PW3</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS</td><td>------</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 of BNSS Act</td><td>16.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>------</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>04.02.2026</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>23.03.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>23.03.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>------</td></tr>
</table>

****

இவ்வழக்கானது 30.12.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 574/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 23.03.2026–ஆம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.பாக்கியராஜ், M.கண்ணன், K.பிரேம்குமார் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**குற்றமுறையீட்டின் சுருக்கம்:**

**2.** இவ்வழக்கில் கடந்த 31.12.2022 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் உத்தமநல்லூர் கிராமம், கிணற்று தெருவில் சாட்சி–1 சுதா என்பவரை 1 மற்றும் 2ம் எதிரிகள் இருவரும் சேர்ந்து சாட்சி–1 அசிங்கமாக பேசி 1ம் எதிரி விமல் என்பவர் கத்தியால் சாட்சி–1 சுதா என்பவரை ஒரு பெண் என்றும், பாராமல் தெருவில் வைத்து கத்தியால் அவர் தலையில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் சம்பவத்தைப் பார்த்து மடக்க வந்த சாட்சி–2 சிவக்குமார் என்பவரை 1ம் எதிரி கத்தியால் தலையில் வெட்டியும், 2ம் எதிரி சக்திமுத்து என்பவர் சாட்சி–2 ஐ கையால் அடித்து கீழே தள்ளி சாட்சி–2 க்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1ம் மற்றும் 2ம் எதிரிகள் இருவரும் சேர்ந்து உங்களை கொலை செய்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act–ன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3**. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 30.12.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் முன்பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS–ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளி

இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே, அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 சுதா என்பவர் அவரது சாட்சியத்தில் தான் தற்போது அச்சிறுபாக்கம் உத்தமநல்லூரில் வசித்து 100 நாள் வேலை செய்கிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் புகாரை தான்தான் கொடுத்தேன் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் ஆடு மேய்க்க சென்றபோது கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதால் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அப்போது போலிசார் வெள்ளை தாளில் தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், போலிஸார் தன்னை விசாரிக்கவில்லை என் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும், அ.சா.3 தியாகராஜன் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 01.01.2023ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்தீபன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது சுதா என்பவர்

நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.2/2023 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியாண்டி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், எதிரியை தேடிவந்த நிலையில் 06.01.2023 மதியம் 12.00 மணிக்கு உத்தமநல்லூர் காலனி அருகே நின்றிருந்த கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், மற்றொரு எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி விமல் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை என்றும், பின்னர் வழக்கில் காயம்பட்ட சுதா மற்றும் சிவக்குமார் ஆகியோருக்கு விபத்து பதிவேடு வழங்கிய மருத்துவர் மகேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் மேற்படி காயம்பட்ட நபர்களுக்கு காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஜெயபிரியா என்பவரை விசாரித்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) மற்றும் 4 of TNPHW Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் 351(1)(ஆ)BNSS–ன் கீழ் வினவிய போது எதிரி அதனை மறுத்து கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு :–**</u>

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 சுதா என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் அ.சா.ஆ.1 ஐ பரிசீலிக்கையில் கடந்த 31.12.2022 ம் தேதி சனிக்கிழமை மாலை சுமார் 06.00 மணியளவில் ஆடு மேய்த்து ஓட்டி கொண்டு வீட்டுக்கு வரும்போது தன்னை தன் கணவர் திட்டிக் கொண்டு வந்தார் என்றும், தங்கள் வீட்டுக்கு முன்பாக உள்ள வீட்டில் சாத்தமை என்ற கிராமத்தை சேர்ந்த விமல் மற்றும் அவர் மனைவி சௌந்தர்யா தங்கி இருந்தனர் என்றும், விமல் என்பவர் திடீரென்று வந்து கத்தியால் தன்னையும் தன் கணவரையும் யாரை திட்டுற என அசிங்கமான வார்த்தையில் பேசி தன்னையும், தன் கணவரையும் கத்தியால் வெட்டினார் என்றும், வெட்டும் பொழுது சக்திமுத்து என்பவர் தன் கணவர் கழுத்தை அழுத்திவிட்டு தாங்கள் எழுப்பிய சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் தடுத்ததாகவும், மேற்படி நபர்கள் ஊரைவிட்டு ஓட்டிவிட்டதாகவும், பின்னர் தங்களது உறவினர்கள்

உதவியுடன் அச்சிறுப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று பின்னர் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று விட்டு அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**11.** மேற்படி, அ.சா.1 அவரது நீதிமன்ற முதல் விசாரணயில் தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் புகாரை தான்தான் கொடுத்தேன் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் ஆடு மேய்க்க சென்றபோது கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதால் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அப்போது போலிசார் வெள்ளை தாளில் தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இவ்வழக்கின் ஆணிவேரான புகாரையே அ.சா.1 மறுத்து சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் உள்ள சங்கதிகள் குறித்த நியாயமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. அ.சா.1 ஐ அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதும் எவ்வித முரண்பாடும் வெளிகொணரபடவில்லை.

**12.** மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றினை பரிசீலனை செய்கையில் அதில் சுதா மற்றும் சிவகுமார் ஆகியோர் 31.12.2022 ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் அவருக்கு தெரிந்த ஒரு நபர் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக அனுமதிக்கப்பட்டவரை பரிசோதித்து அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சொற்பகாயம் என்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**13.** பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 சிவக்குமார் என்பவரும் அவரது சாட்சியத்தில் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் ஆடு மேய்க்க சென்றபோது கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டதால் மதுராந்தகம் அரசு

மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, இவ்வழக்கின் புகார் அ.சா.ஆ.1 யை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் எதிரிகளின் குற்றச் செய்கைகள் குறித்து அவர்கள் தாக்கியதால் தான் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் எதிரிகள் மேற்படி சாட்சிகளை தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டு சமரப்பிக்கப்படவில்லை என்பது மேற்படி அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**14.** மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.**1** அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.பார்த்திபன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளர் அ.சா.**3** தியாகராஜன் என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.**1** எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.210/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**16.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has

been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேற்கண்ட முரண்பாடுகளால், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தி எதிரிகள் தான் அ.சா.1 ஐ பொது இடத்தில் வைத்து மற்றவர்கள் முன்னிலையில் அருவருக்கத்தக்க வகையில் எதிரிகள் ஆபாசமான வார்த்தைகளை மொழிந்து அ.சா.1 ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படும் வகையில் நடந்துக் கொண்டதாகவோ, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ ஆபத்தான ஆயுதங்களால் தாக்கி அவர்களுக்கு சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act–ன் கீழான கூறுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18.** எனவே முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) r/w 4 of TNPHW Act–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**19.** இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**20.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரி பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 18:06:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | சுதா, க/பெ.சிவக்குமார் |
| அ.சா.3 | சிவக்குமார் த/பெ.பொன்னுசாமி |
| அ.சா.5 | தியாகராஜன் த/பெ.முருகன் |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் | அ.சா.3 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.3 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.3 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.3 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

<u>அரசு தரப்புச் சான்றுப்பொருள் :</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:</u> இல்லை.

<u>குறிப்பு:</u>

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU
Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 18:06:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.